2002 அக்டோபர் 30]

என்று கூறியது அவை மரபிற்கு மாறானது. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி அமங்கலமான வார்த்தைகளை எல்லாம் பயன்படுத்துவது நல்லதல்ல. அவைக் குறிப்பிலிருந்து அது நீக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 82, டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

82—

ஜீவன்தாரா கிணறுகள்

***4744—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:**

மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதியில் ஜீவன்தாரா கிணறுகள் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வாய்ப்புள்ளதா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி மற்றும் வீட்டுவசதி நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜீவன்தாரா கிணறு திட்டம், மத்திய அரசின் திட்டமாகும். இத்திட்டம் 1999-2000 ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டு, பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஜீவன்தாரா திட்டத்தினை மீண்டும் செயல்படுத்த வாய்ப்பில்லை.

டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எண்ணியது எண்ணியாங்கு எய்துவர்" என்பதற்கு இலக்கணமாக காவிரித் தண்ணீரைத் தமிழக காவிரிப் படுகை விவசாயப் பெருமக்களுக்கு தீபாவளி இனிப்பாக வழங்கி வாடிய விவசாயப் பெருமக்களின் வாழ்வில் ஒளி ஏற்றி கூடுதல் இனிப்பாகவும், பத்து இலட்சம் ஏழை எளிய குடும்பங்களுக்கு தீபாவளி பரிசுப் பை ஒன்றையும் அறிவித்து தமிழகம் தத்தளிக்கும் கடுமையான

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

நிதிநெருக்கடியிலும் 21 கோடி ரூபாய் ஒதுக்கிய "வான் பொய்ப்பினும் தான் பொய்யா" வள்ளலின் வாரிசே, எங்களின் மாண்புமிகு அன்னையே; பயன்பெறும் புதுக்கோட்டை மாவட்ட மக்கள் சார்பாக கோடானுகோடி நன்றியைத் தங்கள் பொற்பாதங்களில் சமர்ப்பித்துக்கொண்டு, ஏழையெளிய மக்களின், விவசாய மக்களின், தாழ்த்தப்பட்ட மக்களின் ஏந்தலாகத் தொடர்ந்து விளங்கக்கூடிய அம்மா அவர்களின் நல்லாட்சியில் மத்திய அரசு அறிவித்த ஜீவன்தாரா கிணறு திட்டத்தினை மீண்டும் தமிழகத்திற்குக் கொண்டுவரக் கனிவோடு அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜீவன்தாரா கிணறு திட்டம் பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டம் சுய நிதி உதவிக் குழுக்களை அமைத்து, விவசாயம் சார்ந்த தொழில்களைத் தெரிவு செய்துகொண்டு குழு சார்பு முறையில் பாசன வசதியின் பொருட்டு, கிணறுகளை வெட்டிக்கொள்ள மானியத்துடன்—50 சதவீதம் மானியமும், 50 சதவீதம் வங்கிக் கடனும்—உதவி பெற வாய்ப்புள்ளது. எனவே, குளத்தூர் வட்டாரத்தில் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் கிணறு வெட்டிக்கொள்ள மானியம் எதுவும் அனுமதிக்கப்படவில்லை. ஜீவன்தாரா கிணறு திட்டம் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தோடு இணைக்கப்பட்டுள்ளதால் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 83, திருமதி செல்வி முருகேசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

83—

கால்நடை கிளை மருத்துவமனை

***19957—திருமதி செல்வி முருகேசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியத்தில் முருங்கத்தொழுவில் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?